பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி

சென்னை - 4

10-08-2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தொழில்நுட்பத்தில் சுயசார்பினை எட்ட வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மின்னணுப் பொருட்களின் உற்பத்தி 12 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. பீஹார் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து எந்தவொரு பெயரும் உரிய நோட்டீஸ் இன்றி நீக்கப்படாது என்று தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் கூறியுள்ளது.

4. CBSE சார்பில் விரைவில் சமுதாய வானொலி தொடங்கப்பட உள்ளது.

5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை மகளிர் கால்பந்துப் போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

<<<<>>>>

தொழில்நுட்பத்தில் சுயசார்பினை எட்ட வேண்டும் என்பதே தமது அரசின் நோக்கமாகும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் 22 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான மெட்ரோ திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் மெட்ரோ ரயில் உட்பட ரயில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

<<<<>>>>

மின்னணுப் பொருட்களின் உற்பத்தி 12 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் நடைபெற்ற மெட்ரோ ரயில் திட்ட திறப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற கடந்த 11 ஆண்டுகளில் மின்னணுப் பொருட்களின் உற்பத்தி 6 மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறினார்.

மொபைல் ஃபோன் உற்பத்தியில் உலகின் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் அன்னையின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தின் கீழ் உலக சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் தெரிவித்துள்ளார்.

இந்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்காக இப்பகுதி மக்களுக்கு பாராட்டு தெரிவித்துக்கொள்வதாக கூறினார்.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்திற்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் நீதி கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக பாதுகாப்புப் படையினருக்கு தாம் தலைவணங்குவதாகவும் திரு. சஞ்சய் சேத் தெரிவித்தார்.

<<<<>>>>

பீஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்று மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஹாஜிபூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளிடையே கருத்து வேறுபாடு நிலவுவதாக எதிர்க்கட்சிகள் பொய்பிரச்சாரத்தில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டினார்.

பீஹாரில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

பீஹார் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து எந்தவொரு பெயரும் உரிய நோட்டீஸ் இன்றி நீக்கப்படாது என்று தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் கூறியுள்ளது.

இதுதொடர்பான வழக்கில் தேர்தல் ஆணையத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்திக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

புதுதில்லியில் கடந்த 7ஆம் தேதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தேர்தரல் ஆணையத்திற்கு எதிராக தெரிவித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கர்நாடக தலைமைத் தேர்தல் அதிகாரி இந்த நோட்டீசை அனுப்பியுள்ளார்.

திருமதி Shakun Rani இரண்டு முறை வாக்களித்ததாக கூறியதற்காக ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அந்த நோட்டீசில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்துவதற்கு உரிய ஆவணங்கள் தேவைப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

காங்கிரஸ் கட்சியின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான பிரிவின் தலைவர் பதவியை திரு. ஆனந்த் சர்மா ராஜினாமா செய்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இளம் தலைவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தாம் இந்த முடிவை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

அரசியல் சாசனத்தின் வலிமையே வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்க உத்வேகம் அளித்து வருவதாக உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கவாய் கூறியுள்ளார்.

கௌஹாத்தி உயர்நீதிமன்றத்தின் இடாநகர் கிளைக்கான புதிய கட்டிடத்தை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டபோதிலும் ஒற்றுமையாக, வலிமையாக வளர்ச்சியைக் கண்டு வருவதாக கூறினார்.

பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சிறப்பம்சங்கள் அரசியல் சாசனத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் திரு. பி.ஆர். கவாய் தெரிவித்தார்.

<<<<>>>>

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் பட்டமளிப்பு விழாவில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இஸ்ரோ முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு. நாராயணன் கூறினார்.

<<<<>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடியேற்றும் இயக்கத்தின்கீழ் தில்லியில் மாணவர்கள் பங்கேற்ற மூவர்ணப் பேரணி இன்று நடைபெற்றது.

Thyagaraj மைதானத்தில் இருந்து தேசியப் போர் நினைவுச் சின்னம் வரை நடைபெற்ற இந்தப் பேரணியை தில்லி கல்வியமைச்சர் திரு. Ashish Sood தொடங்கி வைத்தார்.

7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தேசியக் கொடியை ஏந்தியவாறு இந்தப் பேரணியில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சி.பி.எஸ்.இ. சார்பில் விரைவில் சமுதாய வானொலி தொடங்கப்பட உள்ளது.

புதுதில்லியில் அண்மையில் நடைபெற்ற சி.பி.எஸ்.இ-யின் நிர்வாக குழுக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கென இந்த சமுதாய வானொலி செயல்படும் என்றும் சி.பி.எஸ்.இ. கூறியுள்ளது.

<<<<>>>>

பஞ்சாபில் நுகர்வோரின் ரசீதுகளில் முறைகேடுகளை தடுக்க வகை செய்யும் திட்டத்தின்கீழ் 9 கோடி ரூபாய் அளவிற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில நிதியமைச்சர் திரு. Harpal Singh Seema கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நுகர்வோர்கள் தாங்கள் வாங்கும் பொருட்களுக்கு ரசீது பெறுவதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த திட்டம் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதன் மூலம் வரி ஏய்ப்பு தடுக்கப்படுவதாகவும் திரு. Harpal Singh Seema கூறினார்.

<<<<>>>>

அமெரிக்கா, இந்தியாவிற்கு விதித்துள்ள வரி, அந்நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் என்று இணையதள நிறுவனத்தின் ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் செயல்படும் இந்த இணையதள நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், பங்குச்சந்தையிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியா - ஓமன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

இதற்கான பேச்சுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 7 தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்குவங்கம், அசாம், சிக்கிம், மேகாலயா, அருணாச்சலப்பிரதேசம், ஹிமாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா, தமிழகம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை மகளிர் கால்பந்துப் போட்டியில் பங்கேற்க இந்தியா 20 ஆண்டுகளுக்குப் பிறகு தகுதி பெற்றுள்ளது.

மியான்மரில் நடைபெற்ற இதற்கான தகுதிச்சுற்றுப் போட்டியின் 3வது ஆட்டத்தில் இந்தியா, 1-0 என்ற கோல் கணக்கில் மியான்மரை வென்றது.

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை மகளிர் கால்பந்துப் போட்டி அடுத்த ஆண்டு தாய்லாந்தில் நடைபெற உள்ளது.

-------------

உலக விளையாட்டுப் போட்டியின் WUSHU பிரிவில் இந்தியாவின் Namrata அரையிறுதிக்கு முன்னெறியுள்ளார்.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 52 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், லெபனானின் Rassi Barbara-வை வென்றார்.

-----------------------

ஆசிய அமெச்சூர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஹாங்காங்கில் நடைபெற்ற இப்போட்டியில், Bristy Mukherjee ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றார்.

Diya Chowdhury வெண்கலப்பதக்கம் வென்றார்.

-----------

லாவோஸில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் 11 வயதுக்குட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் Suchet Dharennavar வெண்கலப்பதக்கம் வென்றார்.

------------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா 3 தங்கம், 7 வெள்ளி. 4 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பாங்காக்கில் நடைபெற்ற இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் Nisha-வும், 57 கிலோ எடைப்பிரிவில் Muskan-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் ராகுல் தங்கப்பதக்கம் வென்றார்.

60 கிலோ எடைப்பிரிவில் Vini, 65 கிலோ பிரிவில் Nisha, 75 கிலோ எடைப்பிரிவில் Aarti Kumari, 80 கிலோ எடைப்பிரிவில் Kritika Wasan மற்றும் Prachi Tokas வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் Mousam மற்றும் 90 கிலோ எடைப்பிரிவில் Hemant-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 51 கிலோ எடைப்பிரிவில் Yakshika-வும், 70 கிலோ எடைப்பிரிவில் Akansha-வும், ஆடவர் 55 கிலோ எடைபிரிவில் Sivam-வும், 85 கிலோ எடைப்பிரிவில் Gaurav-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

<<<<The End>>>>